




# பேருவளை விஸ்டம் - ஜேர்மனி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கல்லூரிகளுக்கிடையே மாணவர் பரிமாற்றம்

*(Beruwela Wisdom International College and Germany AlbertEinstein College Student Exchange Program)*

## ஒரு பார்வை

பேருவளையில் உள்ள விஸ்டம் சர்வதேச கல்லூரி 2016 ஆம் ஆண்டு முதல் ஜேர்மனியில் பிராங்பேர்ட்டில் உள்ள Albert – Einstein ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கல்லூரியுடன் உற்சாகமான மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சியை தொடங்கி மிக வெற்றிகரமாக இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. மதிப்பு மிக்க அறிவு மற்றும் திறன்களைப் பெறும் போது மாணவர்கள் தங்கள் எல்லைகளை விரிவுபடுத்துவதற்கும் பல்வேறு கலாசாரங்களை அனுபவிப்பதற்கும் இந்த பரிமாற்றத் திட்டம் ஒரு விதிவிலக்கான வாய்ப்பாகும்.

பாடசாலை நிர்வாகத்தின் அயராத முயற்சியாலும் பல பயனாளிகளின் தாராளமான பங்களிப்புகளாலும் இத்திட்டம் சாத்தியமாகியுள்ளது. மாணவர் பரிமாற்றத்திட்டம் என்பது மாணவர்களின் மாறுபட்ட கண்ணோட்டங்கள், பழக்க வழக்கங்கள் மற்றும் கலாசாரங்களை வெளிப்படுத்தும் ஒரு விலைமதிப்பற்ற அனுபவமாகும். இது அவர்களின் எல்லைகளை விரிவுபடுத்துவதற்கும் இன்றைய உலகளாவிய சமூகத்தில் வெற்றிக்கு இன்றியமையாத கலாசாரங்களுக்கு இடையிலான திறன்களை வளர்ப்பதற்கும் வாய்ப்பளிக்கிறது.

பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலை மாணவர்கள் மற்றும் ஜேர்மனி Albert – Einstein கல்லூரி மாணவர்கள் Albert – Einstein பாடசாலை வகுப்புகளில் கலந்து கொள்வார்கள், இரு பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் தொடர்பு கொள்வார்கள் மற்றும் பல்வேறு கலாசார நடவடிக்கைகளில் பங்கேற்பார்கள்.

பரிமாற்றத் திட்டம் என்பது விஸ்டம் இன்டர்நேஷனல் சர்வதேச கல்லூரி மற்றும் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கல்லூரி பாடசாலைகளுக்கிடையேயான கூட்டு முயற்சியாகும், இது 8 ஆண்டுகளாக நடந்து வருகிறது. இந்த கூட்டாண்மை மாணவர்களுக்கு தனித்துவமான கல்வி வாய்ப்புகளை வழங்கியுள்ளது. மேலும் சம்பந்தப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் மிகவும் வலுவான கல்விச் சூழலை உருவாக்குகிறது.

பாடசாலைகள் தங்கள் மாணவர்களுக்கு உலகளாவிய குடிமக்களாக இருக்க அவர்களைத் தயார்படுத்தும் செழுமையான கற்றல் அனுபவத்தை வழங்குவதற்கான பொதுவான இலக்கைப் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்தை தாராளமாக ஆதரித்த பல நபர்களின் உதவி மிகவும் பாராட்டுக்குரியது. அவர்களின் பூரண ஆதரவு இந்த திட்டத்தின் வெற்றி சாத்தியமில்லை.

சீனன்கோட்டையைச் சேர்ந்த பிரபல சமூகசேவையாளரும் ஜேர்மனி மெய்ன் கின்ஸி கிரேஸ் மாநில முன்னாள் மாவட்ட அமைச்சர் கர்ல் ஏ. கௌவ்பரின் இலங்கை இணைப்பாளர் இர்ஸான் முஹம்மத் மற்றும் முஹம்மத் ரிலா பாரூக் குழுவினர், ஜேர்மனியைச் சேர்ந்த கின்ஸிங் கிரேஸ் மாநில முன்னாள் மாவட்ட அமைச்சரான கர்ல் ஏ. கவ்பர் மற்றும் அவரது பாரியார் திருமதி மரியொன் ஏ. கவ்பர், கிளாஸ், திருமதி கிளாரி, விஸ்டம் சர்வதேச பாடசாலை முகாமைத்துவத் தலைவர் அஷ்ஷெய்க் எம்.எச். எம் பவ்ஸர் (நளீமி), பணிப்பாளர்களான திருமதி பத்ரியா பவ்ஸர் மற்றும் ஹாதிக் பவ்ஸர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஹாதிக் பவ்ஸர் ஆகியோரின் முயற்சியால் இந்த மாணவர் பரிமாற்ற வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இரு பாடசாலைகளுக்குமிடையே 2016 ஆம் ஆண்டு முதல் மாணவர் பரிமாற்றம் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலை மாணவர்கள் ஜெர்மனிக்கு விஜயம் செய்வதோடு, அங்குள்ள பாடசாலையில் கற்றல், கற்பித்தல் முறைதொடர்பாக நேரடியாக பார்வையிட்டு அனுபவங்களை பெற்று வருகின்றனர்.

மேற்படி மாணவர் பரிமாற்றத் திட்டம் மாணவர்கள் தங்கள் எல்லைகளை விரிவுபடுத்துவதற்கும் மதிப்புமிக்க அறிவு மற்றும் திறன்களைப் பெறுவதற்கும் ஒரு சிறந்த வாய்ப்பாகும். இத்திட்டத்தை சாத்தியப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலை மற்றும் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் பாடசாலை நிர்வாகமும் ஒத்துழைப்பாளர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இந்தவேலைத் திட்டத்தின் கீழ் ஜேர்மனிய பாடசாலை மாணவர்கள் 20 பேரும், 3 ஆசிரியர்களும் கடந்த 11 ஆம் திகதி (11.11.2024) பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலைக்கு வருகை தந்தனர். இவர்களுடன் மாநில முன்னாள் மாவட்ட அமைச்சர் கர்ல் ஏ. கௌபர் அவரது பாரியார் திருமதி மரியொன் எயர் கவுபர் உள்ளிட்ட ஜெர்மனிய நாட்டு பிரமுகர்களும் இந்த விஜயத்தில் அடங்குகின்றனர்.

வருகைதந்த ஜேர்மனிய பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிரமுகர்களுக்கு பாடசாலை முகாமைத்துவ தலைவர் அஷ்ஷெய்க் பௌஸர் ஹுஸைன் (நளீமி) தலைமையில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதன் போது, விஸ்டம் சர்வதேச பாடசாலை மாணவர்களின் பாரம்பரிய கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றமை விஷேட அம்சமாகும். பாடசாலையின் நிர்வாக அதிபர் திருமதி அனூவா ராஜபக்ஷ, கல்வித்துறை தொடர்பான அதிபர் நிலூபா லியனகே, பிரதி அதிபர் அப்துல் காதர், பாடசாலை பணிப்பாளர்களான ஹாதிக் பௌஸர் மற்றும் திருமதி பத்ரிய்யா பௌஸர் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பல பிரமுகர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

விஸ்டம் சர்வதேச பாடசாலையில் ஜேர்மனிய மொழியும் கற்பிக்கப்பட்டு வருகிறது. இந்த வரவேற்பு நிகழ்வின்போது மாணவர்களும் ஆசிரியர்களும் ஜேர்மனிய மொழியில் உரையாற்றினர். இந்த மாணவர்களின் ஜேர்மனிய மொழி வளம் குறித்து பலரும் பாராட்டி பேசினர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய கர்ல் ஏ. கௌபர், விஸ்டம் சர்வதேச பாடசாலையின் முன்னேற்றம், மாணவர்களின் ஆளுமை ஆசிரியர்களின் தியாக சேவை குறித்து பெரிதும் பாராட்டினார். இரு பாடசாலைக்கு இடையிலான இந்த மாணவர் பரிமாற்ற நிகழ்வு தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்றும் அதற்கு தனது முழுமையான ஒத்துழைப்பு கிடைக்கும் என்றும் கூறினார். கர்ல் ஏ. கௌபரின் பொதுப்பணிகளை கௌரவித்து விஸ்டம் சர்வதேச பாடசாலை நினைவுச் சின்னம் மற்றும் பெறுமதி வாய்ந்த இரத்தினக்கல் பதித்த மோதிரம் ஒன்றையும் வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிய மாணவர்கள் விஸ்டம் சர்வதேச பாடசாலை வகுப்பறைகளுக்குச் சென்று மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியருடன் கலந்துரையாடலில் பங்குபற்றினர். ஜேர்மனிய மாணவர்களது மேடை நிகழ்ச்சியும் இங்கு இடம் பெற்றமை விஷேட அம்சமாகும்.

இந்த மாணவர்கள் பேருவளை ஜாமிய்யா நளீமிய்யா கலாபீடம் உட்பட பேருவளையில் உள்ள வரலாற்று பிரசித்திபெற்ற இடங்களையும் பார்வையிட்டனர்.



**பி.எம். முக்தார்**
பேருவளை விசேட நிருபர்


















